

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2025) முகாம் அலுவலகத்தில் கழகப் பொருளாளர், மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர். பாலு அவர்கள் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர் இளங்கோ மகள் திருமதி இராகவி அவர்கள் முதுகலை மருத்துவப் பட்டப்படிப்பில் (MD) தேர்ச்சி பெற்றதையொட்டி குடும்பத்துடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். திருமதி. துர்கா ஸ்டாலின் உடன் உள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் சி.எச்.சேகர் தனது திருமணநாளையொட்டி குடும்பத்துடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். திருமதி. துர்கா ஸ்டாலின் உடன் உள்ளார்.



அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவாக்குடி நகராட்சி செடிமலை முருகன் கோயில் பகுதியில் தனது சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு (2024–2025) நிதி ரூ.16.50 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட அங்கன்வாடி மையத்தை குழந்தைகளின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். இந்நிகழ்வில் துவாக்குடி நகர் மன்றத் தலைவர் காயாம்பு நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.25.63 கோடி மதிப்பீட்டில் 11 புதிய வளர்ச்சித் திட்டப்பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்!

அரியலூர், டிச.15–

அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி மற்றும் உடையார்பாளையம் பேரூராட்சி, செந்துறை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு கிராம ஊராட்சிகளில் ரூ.25.63 கோடி மதிப்பீட்டில் 11 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் கலந்து கொண்டார்.

அரியலூர் மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை துவக்கி வைத்த பின்னர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

நெடுஞ்சாலைத்துறையின் மூலமாக குன்னம் சட்டமன்றத் தொகுதி, செந்துறை ஒன்றியத்தில் பல்வேறு புதிய சாலைகள் அமைக்கின்ற பணிகள், துவக்கி வைக்கப்பட்டது. கடந்த மழைக்காலங்களில் ஏற்பட்ட வெள்ள பெருக்கின்போது வெள்ள நீர் வடியாமல் இரண்டு கிராமங்கள் மூழ்குகின்ற நிலையில் இருந்த இடத்தில் சாலையை வெட்டி நீரினை அகற்றுகின்ற நிலை இருந்தது. அந்த இடத்தில் புதிய பாலம் அமைக்கப்பட இருக்கிறது. பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று செந்துறை ஜெயங்கொண்டம் சாலையை அகலப்படுத்தும் பணி, அதே போன்று பல்வேறு சாலை களை அகலப்படுத்துக்கின்ற பணி, புதிய சாலைகள் அமைக்கும் பணி, பாலம் அமைக்கும் பணி உள்ளிட்ட பல்வேறு பணிகள் இன்றையதினம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது என மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அதன்படி உடையார்பாளையம் பேரூராட்சியில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் திருச்சி சிதம்பரம் சாலை கி.மீ 76/7 – 77/9 வரை சாலை அமைக்கும் பணியினையும், தொடர்ந்து, உடையார்பாளையம் பேரூராட்சி வார்டு எண்.5ல் ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணியையும் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்து, பின்னர், உடையார்பாளையம் பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு ரூ.20 இலட்சம் மதிப்பிலான வாகனத்தினையும் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதனைத்தொடர்ந்து செந்துறை ஊராட்சி ஒன்றியம், உஞ்சினி ஊராட்சியில் ரூ.220 இலட்சம்மதிப்பீட்டில் உஞ்சினி வாரியங்காவல் சாலை கி.மீ 2/0 – 4/0 வரை ஒரு வழித்தடத்திலிருந்து இடைவழித்தடமாக அகலப்படுத்தி உறுதிபடுத்துதல் பணியையும், தொடர்ந்து, ரூ.230 இலட்சம் மதிப்பீட்டில் உஞ்சினி வாரியங்காவல் சாலை கி.மீ 0/0 – 2/0 வரை ஒரு வழித்தடத்திலிருந்து இடைவழித்தடமாக அகலப்படுத்தி உறுதிபடுத்துதல் மற்றும் கி.மீ 0/8ல் பெட்டி வடிவ கல்வெர்ட் திரும்ப கட்டுதல் பணியையும், அதனைத்தொடர்ந்து, செந்துறை ஊராட்சியில் முதலமைச்சரின் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.1400 இலட்சம் மதிப்பீட்டில் அரியலூர் ஜெயங்கொண்டம் சாலை (வழி) செந்துறை (மா.நெ.217) கி.மீ 22/0– 24/0 வரை இரு வழித்தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி உறுதிபடுத்துதல், பெட்டி வடிவ கல்வெர்ட் திரும்ப கட்டுதல், தடுப்பு சுவர் அமைத்தல், மையத் தடுப்பு அமைத்தல் மற்றும் பேருந்து நிறுத்தம் அமைத்தல் பணிகளையும், பின்னர் நக்கம்பாடி ஊராட்சியில் ரூ.132 இலட்சம் மதிப்பீட்டில் செந்துறை வேப்பூர் இறையூர் சாலை வழி புது வேட்டக்குடி கி.மீ 1/0 – 4/0 வரை ஓடுதளத்தின் தரத்தை மேம்பாடு செய்தல் பணியையும் துவக்கி வைத்து, பணிகளை தரமான கட்டுமான பொருட்களை கொண்டு, உரிய காலத்திற்குள் விரைவாக முடித்திட வேண்டும் என சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, குழுமூர் ஊராட்சியில் ரூ.230 இலட்சம் மதிப்பீட்டில் பொன்பரப்பி திட்டக்குடி சாலை கி.மீ 9/8 – 12/0 வரை ஒரு வழித்தடத்திலிருந்து இடைவழித்தடமாக அகலப்படுத்துதல் பணியையும், தொடர்ந்து ரூ.135 இலட்சம் மதிப்பீட்டில் செந்துறை அங்கனூர் அகரம்சீகூர் திருமாந்துரை சாலை கி.மீ 7/0 – 9/4 வரை ஓடுதளத்தின் தரத்தை மேம்பாடு செய்தல் பணியையும், பின்னர், ராம்கோ சிமெண்ட் ஆலை முன்பு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மாத்தூர் கோட்டைக்காடு முதல் சிலுப்பனூர் சாலை (வழி) தளவாய் சேந்தமங்கலம் சாலை கி.மீ 1/4 ல் பெட்டி வடிவ கல்வெர்ட் திரும்ப கட்டுதல் பணியையும், அதனைத்தொடர்ந்து சன்னாசிநல்லூர் ஊராட்சியில் ரூ.105 இலட்சம் மதிப்பீட்டில் அங்கனூர் தாமரைப் பூண்டி சாலை (வழி) சன்னாசிநல்லூர் சாலை கி.மீ 2/6 – 5/0 வரை ஓடுதளத்தின் தரத்தை மேம்பாடு செய்தல் பணியையும் துவக்கி வைத்து, பணிகளை விரைவாகவும், தரமாகவும் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, நெடுஞ்சாலைத்துறை கோட்டப் பொறியாளர் வடிவேல், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிச்சாமி, உடையார்பாளையம் பேரூராட்சி மன்றத்தலைவர் மலர்விழி ரஞ்சித்குமார், நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்டப் பொறியாளர்கள் மற்றும் உதவி பொறியாளர்கள், வட்டாட்சியர்கள், ஒன்றிய பொறுப்பாளர்கள் தனசேகர், பூ.செல்வராஜ், பொன்.செல்வம், பேரூர் செயலாளர் ப.கோபாலகிருஷ்ணன் மற்றும் இதர அரசு அலுவலர்கள் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருவள்ளூர் மாவட்டம் – ஆவடி மாநகராட்சியில் ரூ.9.66 கோடி மதிப்பீட்டில்

# சாலை மேம்பாலம், பேருந்து நிறுத்தம், கால்வாய் அமைக்கும் பணிகள்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார் !

திருவள்ளூர், டிச. 15–

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதியில் ரூ.9.66 கோடி மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணிகளை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டில் தொடங்கி வைத்தார்.

ஆவடி மாநகராட்சி 46 வது வார்டு ஜாகிர் உசேன் தெருவில் 9.00 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி 44 வது வார்டு. குடியிருப்பு பகுதி இரண்டாவது தெருவில் 11.00 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, 40 வார்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 91 வது தெருவில் 21.40 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணி. 41 வது வார்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 17 வது தெருவில் 10.30 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை அமைக்கும் பணி, 35 வது வார்டு திருமலைராஜபுரம் பகுதியில் 23.50 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய தார் சாலை சீரமைக்கும் பணிகள் 48 வது வார்டு. அன்பு நகர் பிரதான சாலையில் 18.30 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் தார் சாலை அமைக்கும் பணி, 33 வது வார்டு அயப்பாக்கம் சந்திப்பில் 40 40 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சிறு பாலம் அமைக்கும் பணி 31 வது வார்டு புதிய அண்ணாநகர் என் எஸ் கே தெருவில் 12 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணி 32 வது வார்டு திருமுல்லைவாயில் அண்ணா நகர் ரயில் நிலைய அருகில் 15 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பேருந்து நிறுத்தம் அமைக்கும் பணி 32 வது வார்டு திருமுல்லை வாயில் சிவசக்தி நகரில் 15.70 லட்சம் மதிப்பீட்டில் தார் சாலை சீரமைத்தல் பணி 30 வார்டு தனபால் தெருவில் 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு திட்ட பணிகள் 28 வது வார்டு திருமுல்லைவாயில் மணிகண்டபுரம் ஏழாவது தெருவில் 9. 60 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அதே போல் 25வது வார்டு ஸ்ரீதேவி வைஷ்ணவி நகரில் 9.90 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணிகள் 6 வது வார்டு திருமுல்லைவாயில் 21.00 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணி , மற்றும் 39, 38, 23, 22,14, 18, 15, 3, 5, 12 ஆகிய வார்டுகளின் 2. கோடியே 88 லட்சம் 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மழை நீர் வடிகால் கால்வாய், 9 புதிய சாலை அமைக்க பணிகளை தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

# தமிழ்நாட்டில் தேசிய ஆயுஷ் மருந்தியல் கண்காணிப்புத் திட்டத்தின் செயல்பாடுகள் என்ன?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!

தருமபுரி, டிச. 15-

நாட்டின் கிராமப்புறங்களில் ஆயுஷ் மருந்துகளின் பாதுகாப்பு தன்மை,எதிர்வினை,மற்றும் தரம் குறித்து கண்காணிக்க ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?



தமிழ்நாட்டில் தேசிய ஆயுஷ் மருந்தியல் கண்காணிப்பு திட்டத்தின் (PVPA) கீழ் இணைக்கப்பட்டு செயல்பட்டு வரும் ஆயுஷ் மருத்துவமனைகள், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் புற அலகுகளின் எண்ணிக்கை என்ன? நாட்டில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மருந்தியல் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன?

பாரம்பரிய மருத்துவத்தை அதிகளவு பயன்படுத்தும் பெரிய கிராமபுற மற்றும் பழங்குடி இன மக்களை கொண்டுள்ள தருமபுரி மாவட்டத்தில் பிரத்யோக ஆயுஷ் மருந்தக கண்காணிப்பு மையங்கள் ஏதேனும் இதுவரை நிறுவப்பட்டுள்ளதா? அல்லது முன்மொழியப்பட்டுள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?

கிராமப்புற சுகாதார பணியாளர்கள் மற்றும் ஆஷா பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறதா? தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஆயுஷ் மருத்துவ பயிற்சியாளர்கள் மருத்துகளின் எதிர்வினைகளை நாட்டில் உள்ள ஆயுஷ் சூத்திரங்களுடன் அடையாளம் கண்டு,அது குறித்த முறையான அறிக்கையினை நிர்வகித்து வருகின்றனரா? என்று ஆயுஷ் அமைச்சகத்தின் (ஐ.சி.)அமைச்சர் பிரதாப் ராவ் ஜாதவ்விடம் மக்களவையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர். ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.



துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாளை முன்னிட்டு, கரூர் மாவட்ட கழகத்தின் சார்பாக, மொத்த பரிசுத்தொகை ரூ 4,80,000/ மற்றும் கோப்பைகளுக்கான, மாவட்ட அளவிலான ஆண்களின் இறகு பந்து போட்டிகளை, கரூர் மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. கரூர் ஆபிஸர்ஸ் கிளப் உள் விளையாட்டு அரங்கில் துவக்கிவைத்தார்.



கிருஷ்ணகிரி அரசு மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் துவக்கி வைத்து, 1,023 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். உடன், மண்டல இணை இயக்குநர் கவிதா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் கௌரிசங்கர், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் அன்பரசன், மாவட்ட துணைச் செயலாளர் கோவிந்தசாமி மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.